குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண்.29/2023

எ.ம.சா.1

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06–ம் தேதி திங்கள் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தேவி | தொழில் | |
| கணவர் பெயர் | சின்னக்குழந்தை | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.40 மணி,

Complainant Ambika present. Advocate Mr. N. Murugan present for Complainant. Accused Devi present. Advocate Mr. G. Prabhu present for accused.

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1) புகார்தாரர் ரூ.9,00,000 க்கு காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கு காசோலை கனரா வங்கியை சேர்ந்தது. காசோலை எண் தெரியாது. வழக்கு காசோலை என்னுடையது என்றால் சரிதான். எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு 16.02.2023 ஆம் தேதி கிடைக்கப்பெற்றது. பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான், பணம் வாங்கவில்லை என்பதால் அனுப்பவில்லை. 09.12.2023 ஆம் தேதி புகார்தாரரின் வீட்டிற்கு வந்து ரூ.9,00,000 கடன் வாங்கி அதற்காக பின் தேதியிட்ட 09.02.2023 காசோலையை கொடுத்தேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் மேற்படி காசோலையை 09.02.2023 ம் தேதி வசூலுக்கு செலுத்திய விபரம் எனக்கு தெரியும். அன்றைய தேதி எனது வங்கி கணக்கில் போதுமான பணம் இல்லை என்று சொல்லி காசோலை திருப்பப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2) எனக்கும் புகார்தாரருக்கு கடந்த 10 வருடங்களாக பேச்சு வார்த்தை இல்லை. பிறகு எவ்வாறு என்னுடைய காசோலை அம்பிகாவிடம் சென்றது என்றால் ரோஜா மகளிர் சுய உதவி குழுவில் புகார்தாரர் தலைமை பொறுப்பு வகித்தார் நான் துணை தலைவியாக இருந்தேன். அந்த சமயத்தில் குப்பாயி என்பவரிடம் லோன் வாங்கி தருவதாக கொடுத்தேன். புகார்தாரர் மேற்படி மகளிர் குழுவின் தலைவி என்பதற்கு ஆதாரம் சமர்ப்பித்துள்ளேனா என்றால் இல்லை. பொதுவாக மகளிர் சுய உதவி குழுவில் காசோலை மற்றும் சொத்து ஆவணங்கள் வாங்குவதில்லை என்றாலும் வங்கி கணக்கு புத்தகம் ஆதார் கார்டு பான் கார்டு போட்டோ ஆகிய ஆவணங்கள்தான் பெற்றுகொள்வார்கள் என்றால் சரியல்ல. என்னிடம் அனைத்து ஆவணங்களையும் வாங்கிக்கொண்டார். மேற்படி சங்கதிகள் பொய்யானது என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

3) குப்பாயி என்பவர் ரோஜா மகளிர் சுய உதவி குழுவில் தலைவியாக இருந்தார் என்றால் இல்லை மேலாளராக இருந்தார். 2019 ஆம் ஆண்டு குப்பாயி மற்றும் புகார்தாரரிடம் எனது வீட்டு பத்திரம் மற்றும் காசோலை கொடுத்ததற்காக ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய சாட்சியத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் அளித்துள்ளதாக சொல்லியுள்ளேன். அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேனா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் நான் குப்பாயி என்பவரின் மீது புகார் அளித்தேனா என்றாலும் புகார்தாரர் மீது புகார் அளிக்கவில்லை என்றாலும் சரிதான். காசோலையை புகார்தாரரிடம் நான் வாங்கிய கடனுக்காக கொடுத்தேன் என்றாலும் மேற்படி சங்கதிகள் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

4) 2023 ஆம் ஆண்டு புகார்தாரர் வீடு எனது வீட்டிற்கு அருகில் இருந்தது என்றால் சரியல்ல. புகார்தாரரும் நானும் ஒரே வங்கியில் தான் வங்கி கணக்கு வைத்துள்ளோம். நான் பணம் வாங்கினேன் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 01.08 மணி.

Sd/.S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.